ஈமுருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அருணகிரிநாதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.02.2019, செவ்வாய்க்கிழமை

1. **ஞானவழி கேட்டு திக்கெல்லாம்**
   **நம்பகம் திடமிலா அலையும் மானிடா**
   **தானதருமமுடன் ஞான வழிதனை**
   **தானும் நீ செய்து கொண்டு எத்தனிக்க**
2. எத்தனிக்க உண்மை ஞானமதை
   எளிதாய் அடைந்து தெளிவாயென
   உத்தமம்பட நித்ய பிரசன்ன ஆசி
   உயர்வான **விளம்பி கலை திங்கள்**
3. **திங்களிலே இருபான் நவதிகதி குசன் வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 29ம் நாள் 12.02.2019, செவ்வாய்க்கிழமை)**
   தேசிகனுன் வழி மாற்றம் நிகழ
   இங்கனமே அருணகிரிநாதரும்
   இயம்பிடுவேன் உலக மக்கள் பயனுற
4. பயன்தரும் பக்குவம் பரிபக்குவம்
   பண்பான குணநலங்களுடன்
   தயவு பெருக்கம் தருமசிந்தை
   தன்னார்வ தொண்டு நிலை பெருக
5. பெருகவே மக்களே வாரீரென
   பேராசான் அரங்கன் அழைப்பு தந்து
   முருகப்பெருமான் சடாட்சர தீட்சைபட
   முழுமதி பூசை செய்து வழங்கிட
6. வழங்கிட இனியும் காலம் கடத்தா
   வணங்கி வாரீர் மக்களே
   கலங்கமற அடிபணிந்து நல்
   கந்தவேலன் சூட்சும பலம் கொண்ட
7. கொண்டநல் அரங்கன் தயவும்
   கொள்கையும் ஏற்று நன்கு
   தொண்டராகி அடையாளம் கொண்டிட
   தெளிந்த நிலை கூடி பூரண ஞானம்
8. பூரண ஞானம் இலகுவாய் கிட்டும்
   புண்ணியமான அரங்கன் தருமம்
   தரணியில் வளர வகை செய்து
   தருமத்தில் உதவி வரும் மக்கள்

9. மக்களுக்கு தடை என்பதில்லா
மனபலம் ஞான பலம் உறுதி
தேக்கமிலா காரிய சகல சித்தி
தேடலிலா நிறைவு கண்டுமே

10. கண்டுமே அரங்க மகான் வழி
கலசமுனி சக்தி கந்தமகா சக்தி
தொண்டுவழி வரும் மக்களடைந்து
தெய்வீக மெய்ஞானம் பெறுவதுடன்

11. பெருமைபட பிறவா பெரும் பேறும்
பேசிடுவேன் வரும் மக்களடைவர்
தருமமோடு கூடிய முயற்சி வெற்றி
தானவர்களே தவராஜன் தேடும் ஞானியாவர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அருணகிரிநாதர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஞானத்தை அடையும் விருப்பத்தில் ஞானத்தை அடைவது எப்படி என வழிவகை தெரியாமல் உலகின் பலவிதமான இடங்களுக்கு சென்று ஞானத்தை தேடித்தேடி அலைந்து திரிந்து இறுதிவரை உண்மை ஞானம்தனை அடைய முடியாமல் அந்த வகையிலும் நம்பிக்கை இல்லாது போய், மனதிடம் இழந்து எதை நம்புவது என குழம்பி திரிந்து கொண்டிருக்கும் மனித குலமே தானதருமம் எனும் அறவழிதனை ஏற்று தானதருமங்களை செய்து புண்ணியபலம் பெருக்கி, தக்க குரு உபதேசம் பெற்ற ஞானவழிதனை ஏற்று அதன்வழி செல்ல முயற்சித்தால் உண்மையான ஞானமதை, உண்மையான குருவின் மூலம் எளிதாக அடைந்து தெளிவடையலாம் என உலகோர்க்கு கூறியே உண்மை குருநாதா ஆறுமுக அரங்கமகா தேசிகா உமது மூலமாக இவ்வுலகினில் உலக மாற்றம் நிகழ வேண்டியே **விளம்பி வருடம் தை மாதம் 29ம் நாள் 12.02.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே அருணகிரிநாதர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அருணகிரிநாதர்.

உலக மக்களெல்லாம் பயனடையும் பொருட்டு உலகோர் பக்குவமும் பரிபக்குவமும் பெற்று நற்பண்புமிக்க குணநலன்களுடன் தயவு உணர்வு பெருகி தருமசிந்தையும் பெருகி சுயநலம் மறந்து பொதுநல நோக்கு பெருகி தன்னார்வ தொண்டின் மீது நாட்டம் கொண்டு உலகினில் தன்னார்வ தொண்டு நிலை பெருகிட மக்களே வாரீர் வாரீர் என உலகோரை உலகப் பேராசான் யுகமாற்ற தலைமைமுனி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரும் தாயன்போடு அழைப்பு தந்து தம்மை நாடி வரும் மக்களுக்கு முருகப்பெருமானின் அருள்பலம்மிக்க சடாட்சர தீட்சைதனை முழுமதி பூஜை எனும் பௌர்ணமி சிறப்பு சித்தர்கள் வழிபாடுகளைச் செய்து உலகின் எல்லா சித்த பெருமக்களின் அருளாசிகளுடன் அன்பர்களுக்கு வழங்கி வருகின்றார்.

ஆதலினால் கலியுக மாயையுள் கட்டுண்டு பிறவி நோக்கம் அறியாது மயங்கி கிடக்கின்ற கலியுக மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் உடன் விரைந்து வாருங்கள். உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனை நோக்கி யுகமாற்ற ஞானி அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை பயபக்தி விசுவாசத்துடன் பணிந்து கந்தவேலனாம் எம்பெருமான் முருகப்பெருமானின் சூட்சும பலம்மிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவினைப் பெற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றி ஞானம் தரும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூயநெறி ஞானக் கொள்கைகளை ஏற்று வாழ்வினில்

அடிபிறழாமல் பின்பற்றி நடந்து நன்கு தொண்டுகளைச் செய்து அரங்கன் விரும்பும் நல்தொண்டர்களாக ஆகியே அரங்கனின் சீடர்கள் எனும் அடையாளத்தை பெற்றிட அவர்களுக்கு அரங்கனின் அருளால் தயவால் அறிவில் தெளிவும், முதிர்ச்சியும் உண்டாகி பூரண ஞானம் அடைகின்ற வழிகளும் புலப்பட்டு அரங்கன் தயவால் பூரண ஞானமும் எளிதாய் கிட்டுமப்பா.

புண்ணியம் மிக்க அரங்கமகா தேசிகனாரின் தருமம் உலகமெலாம் வளர்ந்து ஓங்கிட அவரவரும் தம்மால் இயன்ற அளவு தாராளமாய் பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் வரவர, தர்மம் செய்திட்ட அன்பர்களுக்கு தடை ஏதும் இல்லாத வகையிலே மனோபலம் பெருகி தடைகளைத் தாண்டி சென்று ஞானபலம் அடைவது உறுதியாகும். தடையின்றி அவர்களது செயல்கள் வெற்றி அடையும், எல்லா வகையிலும் சித்தி கண்டு, தேடிச் செல்லாமல் தானே நிறைவு கண்டிடுவார்கள். அவர்கள் தேடிச் செல்லாமலேயே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மூலமாக கலசமுனியாம் அகத்தியர் பெருமானாரின் சக்தியும் கந்தமகா சக்தி எனப்படுகிற முருகப்பெருமானின் ஞானசக்தியும் அவர்கள் செய்கின்ற தன்னலமற்ற தொண்டுகள் மூலமாகவே தொண்டு செய்கின்ற மக்களெல்லாம் பெற்று தெய்வீக மெய்ஞானத்தை பெறுவதுடன் பெருமைமிக்க பிறவியை அறுத்து அடையும் பிறவா பெருநிலையெனும் பேரின்ப நிலையையும் அடைந்திடுவார்கள்.

**தருமத்துடன் கூடிய தவமுயற்சியை வெற்றியடையும் தருமத்தோடு தவமுயற்சியை அரங்கன் துணையுடன் செய்வோரே தவராசன் ஆறுமுக அரங்கன் ஞானம் அளித்திட தேடுகின்ற ஞானவான்களாவார், அவர்களே அரங்கன் அருளால் ஞானியாவார்** என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் அருணகிரிநாதர்.

–சுபம்–